**07.07.2023 OS. 53/2021 வா.சா.2 - ஹரிஹரன்**

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. யாருக்கு எந்த வகையில் பாத்தியம் என்று தெரியாது. சேது என்பவர் கடையில் நான் 3 வருடம் முடிதிருத்தும் வேலை பார்த்தேன். யார் மின் கட்டணம் கட்டினார்கள், வீட்டு ரசீது யார் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. கடைக்கான வாடகையை சேது யாரிடம் கொடுத்தார் என்று தெரியாது. 1ம் பிரதிவாதியின் அப்பாவை தெரியும். எங்கள் ஊரை சேர்ந்தவர். 3ம் வாதி என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். தாவா சொத்து சம்மந்தமாக 1ம் பிரதிவாதி தந்தை பெயரில் இருந்து வாதியின் தகப்பனார் பெயருக்கு போலியாக பட்டா மாற்றிக்கொண்டது சம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சனை எனக்கு தெரியாது. வாதிக்கு ஆதரவாக நிருபணவாக்குமூலத்தில் உள்ள பொய்யான சங்கதிகளுக்கு வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.